2002 ஏப்ரல் 19]

வரையிலும் சிகிச்சை பெறுகிற மருத்துவமனையாக இருந்து கொண்டிருக்கிற இந்த நிலையில் உள் நோயாளிகளுக்கான 193 படுக்கைகள் மட்டுமே கொண்ட மருத்துவமனையாக இது இருந்து கொண்டிருக்கிறது. இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு பர்கூர், காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிகளில் இருந்து கிருஷ்ணகிரிக்கு வருகிற நிலை இருந்து கொண்டிருக்கிற காரணத்தால், இங்கு கூடுதல் படுக்கைகளுக்கான கட்டடங்களையும், படுக்கைகளையும் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

அதேநேரத்தில் அந்த அரசு மருத்துவமனையிலே M.D. மருத்துவர் இல்லை; கண் மருத்துவர் இல்லை. அங்கே M.S. D.G.O. மருத்துவர், கூடுதலாக மயக்க டாக்டர் தேவைப்படுகிற நிலைமை அறிந்து அம்மா அவர்களுடைய அரசு நியமிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் தற்போது 21 டாக்டர்கள் பணியில் இருக்கிறார்கள். அதிலே 6 பெண் டாக்டர்கள் இருக்கிறார்கள். அதிலே ஒருவர் தற்போது மாறுதல் பெற்றுச் சென்றிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல கண் சிகிச்சைப் பிரிவுக்கு ஒரு டாக்டர் இல்லாத நிலைமை அங்கே இருக்கிறது. அதைப் போல M.D. General Medicine-க்கு ஒரு டாக்டர் இல்லை. இந்த இரண்டு இடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 176, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

சத்தியமேவ வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

176—

பேருந்து நிலையம்

***1491—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி தொகுதி, திருத்தங்கல் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2002 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகாசி தொகுதி, திருத்தங்கல் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஏ. ஹக்கீம்.

திரு. எம்.ஏ. ஹக்கீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரிலிருந்து சிவகாசிக்குச் செல்கிற பாதையில் சிவகாசிக்கு அருகே 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் மக்கள் வரை வாழக்கூடிய பெரிய ஊராட்சியாக திருத்தங்கல் இருக்கிறது. காவிரி பெருக்கெடுத்தால், கொள்ளுமிடம் கொள்ளிடம் என்பார்கள். சிவகாசி ஒரு குட்டி ஜப்பான் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். அது நாளுக்கு நாள் வளர்ந்து வரக்கூடிய நகரமாக இருக்கின்ற காரணத்தால், அதிகப்படியான தொழில் வளர்ந்து வரக்கூடிய காலகட்டத்தில் அதைத் தாங்கக்கூடிய இடமாக திருத்தங்கல் இப்போது இருக்கிறது. விருதுநகரிலிருந்து தெற்கே சிவகாசிக்குச் சென்றாலும், சிவகாசியிலிருந்து வடக்கே விருதுநகர், மதுரைக்கு வருவதாக இருந்தாலும், எந்தப் பேருந்து வாகனமாக இருந்தாலும் சிவகாசியிலே குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு மக்கள் இறங்கி, ஏறி, பயன்படுத்திக் கொண்டிருக்கிற காரணத்தால், அந்தப் பாதையும் மிகக் குறுகலாக 20, 22 அடிக்குள்ளாக இருக்கிற காரணத்தால், ரோட்டில் இருக்கிற வியாபாரிகளுக்கும் தடை ஏற்படுகிறது; போக்குவரத்துக்கும் தடை ஏற்படுகிறது. பல ஆயிரம் மக்கள் இப்போது பயன்படுத்தக்கூடிய இடத்தில், அதிலும் குறிப்பாகத் தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும், அங்கிருக்கிற தீப்பெட்டித் தொழிற்சாலை மற்றும் அது சம்பந்தப்பட்ட தொழில் வாயிலாக பல கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது என்ற குறிப்புகளும் அழுத்தமாக இருக்கிற இந்த காலகட்டத்தில் அந்த மக்கள் முறையாகப் பயன்படுத்த, போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல், வியாபாரத்திற்கும் தடையில்லாமல், வெளி மாநிலங்களிலிருந்து வரக்கூடிய ஏராளமான வாகனங்கள் இந்த சிவகாசிக்கு தீப்பெட்டித் தொழில் சம்பந்தப்பட்ட தொடர்பிலே நிறைய வந்து போய்க் கொண்டிருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட ஒரு பேருந்து நிலையம் இப்போது அவசியமாக அங்கே தேவைப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியப்படுத்தி, விரைவில் அதை ஏற்படுத்தினால் அங்கே வரக்கூடிய அனைத்துத் தரப்பைச் சார்ந்த மக்களுக்கும் அது

பயனுள்ளதாக இருக்கும். அந்த ஊர் மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரியப்படுத்தி, பேரவைத் தலைவர் வாயிலாக அது அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-35

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order. மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, சொல்லுங்கள்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள், அவரவர்கள் இருக்கையிலிருந்து பேசவேண்டுமா, எந்த இருக்கையிலிருந்து வேண்டுமானாலும் பேசலாமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

திரு. எம்.ஏ. ஹக்கீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எங்கே... (குறுக்கீடு) உங்கள் இருக்கை எண் என்ன?

திரு. எம்.ஏ. ஹக்கீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தாமோதரன் அவர்கள் கேட்ட கேள்வி. (சிரிப்பு) (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹக்கீம், கேள்வி கேட்டவர் வரவில்லையென்றால் அவர் இருக்கைக்கே போகக்கூடாது. (சிரிப்பு) நீங்கள் விருதுநகர் தொகுதி எம்.எல்.ஏ. ஆகவே ஆகிவிடுவீர்கள் போல் இருக்கிறதே. உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடு)

திரு. எம்.ஏ. ஹக்கீம்: இல்லை, நான் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களே, திருத்தங்கலிலே பஸ் ஸ்டாண்டு ரொம்ப அவசியம். நானும் திரு. ஹக்கீம் சொன்னதை வழிமொழிகிறேன். ஹக்கீம், உங்கள் இடத்திற்குப் போங்கள்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹக்கீம் அவர்கள் திருத்தங்கல், சிவகாசி, விருதுநகர் போன்ற பகுதிகளின் சிறப்பைப்பற்றி மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். தாங்களும் அந்தப் பகுதியைச் சார்ந்தவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அங்கே பிரபல தொழிற்சாலைகள், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பல்வேறு பொருட்களைத்

தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் எல்லாம் அமைந்துள்ளன என்பதெல்லாம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப் பெரிய தொழிற்சாலைகள் அமைந்திருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியிலே குறைந்த விலைக்கு அரசு மதிப்பிலான விலைக்கு, பேருந்து நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும், இடத்தை வாங்கிக் கொடுத்தால் நிச்சயமாகப் பேருந்து நிலையம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வரும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஹக்கீம், இடத்தை வாங்கிக் கொடுக்க முயற்சி பண்ணுவோம். அதற்குள்ளே நீங்கள் இடத்தை அபகரித்து விடாதீர்கள். (சிரிப்பு)*

திரு. எம்.ஏ. ஹக்கீம்: *இல்லை, இல்லை. (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 177, திரு. அ.இரா. மலையப்பசாமி மற்றும் செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.*

177—

பணியிடங்கள் நிரப்புதல்

***9634—திரு. அ. இரா. மலையப்பசாமி:**
செல்வி சி. கனகதாரா:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையில் சுமார் 300 வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவை எப்பொழுது நிரப்பப்படும்?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ): ஆம், வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் 418-ம், வேளாண்மை அலுவலர் (வேதியியல்) பணியிடங்கள் 70-ம் காலியாகவுள்ளன.